வாரியத்திற்கு, துறையின்மூலம் கோப்பு அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் கோப்புக்கு விரைவில் நல்ல தீர்வு கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

103—

தொழிலாளர் நலன்

***171—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பஞ்சாலைத் தொழிலாளர்களையும் E.S.I., P.F., திட்டத்தின்கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

10 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, மின்சாரத்தை உபயோகிக்கும் பஞ்சாலைகளில் அல்லது மின்சாரத்தை உபயோகிக்காத 20 தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தியுள்ள பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் அரசு ஈட்டுறுதித் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அதுபோல 20 அல்லது 20–க்கு மேற்பட்ட தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ள பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின்கீழ், பட்டியல் 1–இன்கீழ், வருங்கால வைப்பு நிதி வசதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் E.S.I., P.F., ஆகிய சட்டங்கள் மத்திய அரசால் அமல்படுத்தப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இம்மன்றத்தின் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2011 செப்டம்பர் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது 20–உம், 20–க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றக்கூடிய தொழிற்சாலைகளில்* E.S.I., P.F., *அமல்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்கள்.*

தமிழகத்தில், பஞ்சாலைத் தொழிற்சாலைகளில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நிரந்தரமற்ற, campus *கூலிகள் என்ற பெயரால்,* contract system *என்ற பெயரால், மாங்கல்யத் திட்டம் என்ற பெயரால், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள்* E.S.I., P.F., *பிடித்தம் செய்யப்படாமல் பணியாற்றி வருகின்றனர். அந்தத் தொழிலாளர்களுக்கு* E.S.I.*யும்,* P.F.*ம் பிடித்தம் செய்வதற்கு, மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிருந்தாலும்கூட, அதற்கென்று இருக்கக்கூடிய* Implementation Authority *அதிகாரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் தொழிலாளர்களுக்கும்* E.S.I., P.F. *பிடித்தம் செய்வதற்கான முறையில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால தி.மு.க. ஆட்சியிலே தொழிலாளர்கள் வஞ்சிக்கப்பட்டார்கள். ஆனால், அவர்கள் நீதிமன்றம்மூலமாக சில கொள்கைகளை அங்கே அனுப்பி அதைப்பற்றி ஆராய்ந்தார்கள். ஆனால், அது பாதியிலே விடப்பட்டது. ஆனால், அன்றையதினம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக, திண்டுக்கல்லில் இருக்கின்ற* A.T.P. *அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நம்முடைய சங்கம் அதைப்பற்றி நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பாய முடிவுக்காகக் கேட்கப்பட்டு, அந்த சுமங்கலித் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது போலியாக உள்ளது; தவறாக உள்ளது; அதை நடைமுறைப்படுத்தக்கூடாது என்பதை நீதிமன்றம் தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்திருக்கிறது என்பதை உங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், பஞ்சாலைகளில் பணியாற்றிவரக்கூடிய campus கூலிகளை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கவேண்டுமென்று சென்னை உயர் நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்திருக்கிறது. E.S.I., P.F., பிடித்தம் செய்யாமல் தொழிலாளர்களை அப்படியே வைத்துக்கொள்ளக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது சரியானது; நியாயமானது. என்னுடைய கேள்வியெல்லாம்—இன்றையதினம் பஞ்சாலைகளில் பணியாற்றிவரக்கூடிய நிரந்தரமற்ற தொழிலாளர்கள், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள், E.S.I., P.F., பிடித்தம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருந்தாலும்கூட, மாநிலத்தில் இருக்கக்கூடிய தொழிலாளர் இலாகா, தொழிற்சாலைகள் சட்டத்தை அமல்படுத்தக்கூடியவர்கள், E.S.I., P.F., பிடித்தம் செய்வதற்கு சம்பந்தப்பட்ட Implementation Authorities நடவடிக்கை எடுப்பார்களேயானால், இப்படிப்பட்ட தொழிலாளர்களை இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவர முடியும். அப்படி E.S.I., இல்லாத காரணத்தினால்தான், இழப்பீடு, நஷ்டஈடு கோருவதற்கோ அல்லது பணி நிரந்தரம் செய்வதற்கான வாய்ப்பு, வசதிகளோ இல்லாத சூழல் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, அனைவருக்கும் E.S.I., P.F., திட்டம் கிடைப்பதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—55

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, சில குறிப்பிட்ட நிறுவனங்கள் அவ்வாறு தவறுகள் செய்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நிறுவனங்கள் குறித்து புகார் தருகின்றபட்சத்தில் அல்லது எங்கே இப்படி தவறு நடக்கிறது

என்பதைச் சொல்கின்ற பட்சத்தில், அதைக் கேட்டறிந்து, உடனடியாக நிறைவேற்ற, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காலத்தில் நூற்பாலைகளில் பணிபுரிவது என்பது கௌரவமாகக் கருதப்பட்டது. 'தென்னிந்தியாவின் மான்செஸ்டர்' என்று அழைக்கப்படக்கூடிய கோவை மாநகரில் எண்ணற்ற நூற்பாலைகள் இருந்தன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணிபுரிந்தார்கள். ஆனால், அப்படிப்பட்ட நூற்பாலைகளில் இப்போது கோவை மாவட்டம் மட்டுமல்லாது, தமிழகத்திலே இருக்கக்கூடிய எண்ணற்ற நூற்பாலைகளிலே தொடங்கி, அதற்குப் பிறகு மெல்ல மெல்ல பிற தொழிற்சாலைகளிலும் இப்போது 'கேம்ப் கூலி' என்ற பெயரில், குறிப்பாக 'சுமங்கலி, கண்மணி, மாங்கல்யம்' போன்ற திட்டங்களில் மூன்றாண்டுக் காலத்திற்கு...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *அங்கு 15 வயது முதல் 21 வயது நிரம்பிய இளம் பெண்களை 'திருமண உதவித் திட்டம்' என்ற பெயரில் வேலைக்கு அழைத்துச் சென்று, அவர்களிடத்திலே மூன்றாண்டுக் காலத்திற்கு வேலையை வாங்கிவிட்டு, அவர்களுக்கு மூன்றாண்டுகள் கழித்த பிறகும், குறிப்பிட்ட அந்த 30,000 ரூபாயைக் கொடுப்பதில்லை. இதன் காரணமாக, தற்கொலைகள் உட்பட பல்வேறுவிதமான சம்பவங்கள் நடைபெறுகின்றன. எனவே, இந்த 'சுமங்கலி' திட்டத்தை, இந்தத் திருமண மோசடித் திட்டத்தை அமலாக்கக்கூடிய தொழிற்சாலைகளிலே, அந்த ஒட்டுமொத்த தொழிலாளர்களுடைய சுமங்கலி திட்டத்தை தடை செய்வதற்கு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *டாக்டர், மூலக் கேள்வி, பஞ்சாலைத் தொழிலாளர்களை E.S.I., P.F., திட்டத்தின்கீழ் கொண்டுவர*

அரசு ஆவன செய்யுமா என்பதுதான். சுமங்கலி திட்டத்திற்கும், இதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேலு அவர்கள். (குறுக்கீடுகள்) பஞ்சாலைத் தொழிலாளர்கள் சம்பந்தமாக திரு. ஆறுமுகம் கேள்வி கேட்டிருக்கிறார். அது தொடர்பாக, பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேலு அவர்கள் (குறுக்கீடுகள்) தனிக் கேள்வி போடுவார்கள் அப்போது நீங்கள் சொல்லலாம்.

திரு. கே. தங்கவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய பனியன், பவர் லூம் தொழிற்சாலைகளில் E.S.I., P.F. திட்டத்தைக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், இப்போது திருப்பூர் நகரத்தைச் சுற்றியிருக்கக்கூடிய பகுதிகளில்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, E.S.I., P.F. சட்டங்கள் மத்திய அரசாங்கத்தின்கீழ் இருந்தாலும்கூட, Inspector of Factories ஆய்வு செய்து, அந்த 15, 20 என்ற தொழிலாளர் எண்ணிக்கையை உறுதிப்படுத்தினால்தான், இந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியும். எனவே, மாநில அரசின் சம்பந்தப்பட்ட இலாகாக்கள் நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில்தான், இதைக் கொண்டுவர முடியும். அந்த அடிப்படையில் ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வியாகக் கேட்டால், அதுகுறித்து விரிவான பதில் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]